# ஆண்டாள் பாசுரங்களில் மெய் அழகியல்

**முனைவர் கோ. ரங்கநாதன்**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,**
**டாக்டர். என்.ஜி.பி.கலை அறிவியல் கல்லூரி,**
**கோயம்புத்தூர் - 641048**

40

**ஆய்வுச்சுருக்கம்**:

உலகில் மனித வாழ்வை நெறிப்படுத்துவதில் சமயத்தின் பங்கு அளப்பரியது. மாயோன், சேயோன், வேந்தன், வருணன் ஆகியோர்கள் அந்தந்த திணைகளின் தெய்வங்களாக அடையாளப் படுத்தப்பட்டுள்ளர். பழந்தமிழர்கள் மாயோனாகிய முல்லை நிலத்து திருமாலை பெருந்தெய்வமாக வணங்கி வருகின்றனர். திருமாலின்பால் ஆழ்ந்து பக்தி கொண்டவர்கள் ஆழ்வார்கள். திருமாலின் தெய்வீக குணங்களை வளர்க்க தமிழ் பாசுரங்களைப் பாடி பக்தி தமிழுக்கு புகழ் சேர்த்தனர். அவர்களுள் ஆண்டாள் பங்களிப்பு தனிச் சிறப்பு உடையது. பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாள் நாராயணனை நினைத்து மனமுருகி திருப்பாவையையும் நாச்சியார் திருமொழியையும் இயற்றியுள்ளார். திருப்பாவை பாடல்களின் தனித்தன்மையினையும் தமிழ் பக்தி நயத்தையும் ஆய்ந்து அறிய வேண்டும்.

**முன்னுரை**

பன்னிரு ஆழ்வார்களால் கி பி 6 ஆம் நூற்றாண்டிலிருந்து 9 ஆம் நூற்றாண்டு வரை பாடப்பட்ட பாசுரங்களை நாதமுனிகள் பத்தாம் நூற்றாண்டில் தொகுத்தார். நாதமுனிகள் தொகுத்த ஆழ்வார்களின் பிரபந்தங்களோடு, திருவரங்கத்தமுதனார் இயற்றிய இராமானுச நூற்றந்தாதியும் சேர்த்து நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என மணவாளமாமுனிகள் அமைத்தார். முதலாயிரத்தில் ஆண்டாளின் 173 பாசுரங்கள் இடம்பெற்றுள்ளன. ஆண்டாள் தாம் இயற்றிய திருப்பாவை முப்பது பாடல்களோடு நாச்சியார் திருமொழி 143 பாடல்களையும் சேர்த்து 173 பாடல்களாக திருப்பாவை, நாச்சியார் திருமொழி என இரண்டு பிரபந்தங்கள் உள்ளன.

**பன்னிரு ஆழ்வார்கள்**

பன்னிரு ஆழ்வார்களாக பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர் ஆவர். இவர்களில் பதினொருவரே திருமாலைப் பாட மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரை பாடியவர். ஆழ்வார் பதின்மர் என்னும் வழக்கும் உண்டு.

**ஆண்டாள் தனித் தன்மை**

ஆழ்வார்களில் ஆண்டாள் ஒருவர் மட்டுமே பெண். பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாதலால் அவரை ஆழ்வார் பதின்மரின் சந்ததி என்றும் அவர்களின் ஞானத்தையெல்லாம் சீதனமாகப் பெற்றவர் என்றும்

வைணவப் பெரியோரால் சிறப்பிக்கப்படுபவர். ஒரு சாதரண ஏழை எளிய, வளப்புப் பெண்ணின் பக்தியும் அரங்கன் மீது கொண்ட காதலுமே இறைவனோடு கலக்கும் பேற்றைத் தந்திருக்கிறது. அதன்படி சாதாரண மனிதர்களும் நமக்கும் பகவான் கேட்டதை அருளுவான் என்ற நம்பிக்கையை அனைவரின் உள்ளத்திலும் உதிக்கும் வகையில் ஆண்டாளின் பாடல்கள் அமைக்கின்றது.

திருவில்லிபுத்தூரே நம் ஆண்டாளின் பிறப்பிடமாகும். ஆண்டாள் பூமிப்பிராட்டியின் அவதாரமாய் கருதப்படுகிறாள். கலியுகத்தின் ஒரு நள வருஷத்தில் ஆடி மாதம் சுக்ல சனிக்கிழமை கூடிய பூர நட்சத்திரத்தில் பெரியாழ்வார் நந்தவனத்தில் துளசி செடியில் கிடந்த தெய்வக் குழந்தை. பெரியாழ்வார் ‘கோதை’ எனப் பெயரிட்டு வளர்த்தார்.விஷ்ணு சித்தர் கோதைக்கு வட பெருங் கோயிலுடையான் பெருமையை சொல்லி வளர்த்தார். தமிழ் பாமாலைப் பாடி பூமாலைச் சூடி, சூடிக் கொடுத்த சுடர் விழியாளாக ஏற்றம் பெற்று அரங்கனை மணவாளனாக அடைந்தாள். ஆண்டாளில் தூய பக்தியாலும் காதலாலும் அரங்கனின் விருப்பப்படியே அவரை மணந்து அவரோடு கலந்தாள் ஆண்டாள்.

**திருப்பாவையும் ஆண்டாளும்**

ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்களில் ஆண்டாள் பாடிய திருப்பாவை பெரியாழ்வார் பாடிய திருமொழிக்கு அடுத்தாக வைத்துத் தொகுக்கப் பெற்றிருக்கும் சிறப்பினைப் பெற்றுள்ளது. திருப்பாவை மார்கழி மாதத்தில் உலகெங்கும் உள்ள தமிழக மக்களால் தினந்தோறும் படிக்கப்பெறும் சிறப்பினை உடையது. திருப்பாவையில் ‘வெள்ளியயழுந்து வியாழ முறங்கிற்று’ (13:4) என்ற பாடலடியில் உள்ள குறிப்பை வைத்து ஆண்டாள் கி.பி.716-ஆம் ஆண்டு திருவாடிப்பூரத்தில் அவதரித்ததாகக் கணக்கிடுகிறார் மு.இராகவையங்கார்.

திருப்பாவையின் பாடுபொருள்களாகத் துயில் எழுப்புதல், மார்கழி நீராட அழைத்தல், மழை வேண்டியும், நல்ல மணாளன் வேண்டியும் பாவை நோன்பு நோற்றல், திருமாலைச் சிறப்பித்தல் என அமைகிறது. இப்பாடு பொருள்கள் திருப்பாவையில் மேலோட்டமாகக் காணப்படினும், மெய்யியலோடு தொடர்புடையது. சமுயதாய உள்ளமனிதர்களை பக்தி உடையவர்களாக மற்றும் தன்மை கொண்டது.

**அதிகாலையில் எழுதல்**

ஆண்டாள் பாடிய திருப்பாவையில் பாவைநோன்பு நோற்பதற்குத் தம் தோழியரைத் துயில் எழுப்பும் பாங்கில் அமைந்த பாடல்கள் பத்து. பாவைப் பாடல்களில் ‘துயில் எழுப்புதல்’ (5-10) என்பது வழக்கத்தையயாட்டிய சொற்பொருளாக இருப்பினும், அச்சொல்லின் உட்பொருள், மெய்ப்பொருளை உணர்த்தி நிற்கிறது. அதிகாலையில் துயில் எழ வலியுறுத்தும் பாடல்கள் ஆண்டாள் தம் தோழியரை மட்டும் வற்புறுத்துவதாக மட்டும் பொருளல்ல. உலகத்து மக்கள் அனைவரும் (வையத்து வாழ்வீர்) மெய்ப்பொருளை அடையும் நோக்கத்திலேயே திருப்பாவையில் ஆண்டாளின் ‘துயில் எழுப்புதல்’ என்ற பாடுபொருளை அமைத்துக் கொண்டதாகத் தெரிகிறது.

திருப்பாவையில் இடம் பெற்றுள்ள பாடல்களில் மூன்றில் ஒரு பகுதிப் பாடல்களில் ஆன்மாவை

துயிலெழுப்பும் பொருண்மை பாடப்பட்டுள்ளது. துயில் எழுந்த சிறுமிகள் இறைவனையும் அவர்தம் உறவினர்களையும் திருப்பள்ளியயழுச்சி செய்ய முயல்வதாக ஏழு பாடல்கள் அமைந்துள்ளன. இறைவனைக் காக்கும் அடியவர்களின் மனக்கதவு திறப்பின் இறைவனை எளிதில் காண இயலும் என்பதை மெய்யியல் நம்பிக்கை. அவ்வாறே இங்கும் ஆண்டாளும் அவளது தோழியர்களும் நந்தகோபனின் கோயில் காவலன் உதவியுடன் உள்ளே புகுந்து நப்பின்னை, யசோதை, பலதேவன் போன்றோரது துணையால் கண்ணனைக் காணும் நிலையைக் காண முடிகிறது. இத்திருப்பள்ளி எழுச்சி முறை வழிபாட்டு நெறிமுறைகளில் குறிப்பிடத்தக்க ஒன்று. இறைவழிபாட்டில் அதிகாலை திருப்பள்ளி எழுச்சி முதல் நாள் இரவு பள்ளியறை வரையிலான நிகழ்வுகள் அனைத்தும் தமிழகத் திருக்கோயில் வழிபாட்டு தொன்று தொட்டு பின்பற்றப்பட்டு வருகின்றன.

**மார்கழி நீராடுதல்:**

தோழியரை அதிகாலையில் துயில் எழுப்பி நீராட அழைக்கும் நோக்கத்தை, பெரியவாச்சான் பிள்ளை அவர்கள், "தனித்து செய்ய முடியாத காரியத்திற்குப் பிறர் துணையை நாடுவது மக்கள் இயல்பு" என்று விளக்குகிறார். இறைவனின் அருள் ஆகிய வெள்ளத்தில் நீராடுவது எளிதான காரியம் அல்ல. தேவர்களும் இறைவனைப் பற்றிய ஞானத்தை முற்றிலும் அறிந்தவர்கள் இல்லை. உயிரினங்கள் தனது உணவைத் தனியே உண்ண விரும்பாமல் அழைத்து உண்ணும் பான்மை உலகில் காணப்படுகிறது. இதற்கு உதாரணமாக தன் இனமான காகங்களைத் துணைக்கு அழைத்து உண்பதை இன்றும் காணலாம். எனவே பரம்பொருளின் இன்பத்தைத் தனியாக அனுபவிக்க இயலாது என்று தம் தோழியரை அழைத்து பாவை நோன்பிற்கு அழைக்கும் மெய் உட்பொருளை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

நீராடல் என்ற சொல் அகப் பொருளில் வரும் 'சுனையாடல்' போன்றது. எனவே நீராட அழைத்தல் தொடர்பான பாடல்கள் பரமாத்மாவுடன் பரம பக்தபாகவதர்கள் விரும்பும் பேரின்ப வெள்ளத்தில் கலந்து இன்பமடைவதை குறிக்கின்றது என்பர்.

**நோன்பு நிலை**

வழிபாடு தனிவழிபாடு, கூட்டு வழிபாடு என இருவகைப்படும். தனி வழிபாட்டின் நோக்கம் சுயநலமானது. கூட்டு வழிபாட்டின் நோக்கம் பொதுநலம் வாய்ந்தது. ஆண்டாள் தன் தோழியருடன் பாவை நோன்பு செய்வது கூட்டு வழிபாடாகும். எனவே தான் ஆண்டாள், பாவை நோன்பின் போது மழை வேண்டி வழிபாடு செய்கிறாள். ஆண்டாளின் இக்கூட்டு வழிபாடு மேன்மையானது. தன் நலன் கருதியோ பிறர் நலன் கருதியோ திருக்கோயில் அமைத்து இறைவனை நீராடி பூச்சொரிந்து வழிபடுவது புறவழிபாடு ஆகும். ஆண்டாள், பதுமை போன்ற உருவினை வைத்து தம் தோழியருடன் சேர்ந்து செய்யும் நோன்பு மெய்ப்பொருளை அடையும் அடிப்படையில் அமைந்தது.

**இறைவனோடு சேரும் நிலை**

ஒவ்வொரு சமயங்களிலும் இறைவனை அடைய பல்வேறு வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. சமயங்களின் உண்மை நிலையை நோக்கும்போது அவை ஒவ்வொன்றும் முரண்பட்டன அல்ல என்பது தெளிவாகும். எல்லா ஆறுகளும் கடலை நோக்கியே பயணம் செய்வதைப்போல எல்லாச் சமயங்களும்

இறைவனை நோக்கியே பயணிக்கின்றன. வழிபடு முறையும், வாழ்த்தும் நெறியும் எத்தனையோ வகையில் மாறுபடுகின்றன என்றாலும், அனைத்தும் ஒன்றாகவே முடியும் என்பது சமய நெறியாளர்களின் கருத்து என்பது பெறப்படும்.ஆன்மா இறைவனை எவ்வகையாலும் சார்ந்து இன்புறுதலையே முக்தி என்று அழைப்பர். இந்நிலையை அடைவதற்கு உரிய மார்க்கங்களை நான்காகப் பகுத்துள்ளனர் அறிஞர்கள். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவையாகும். இவை முறையே, இறைவனன்றி பிறிதொன்றும் இல்லை என்ற நிலை, மனதை ஒழுங்குபடுத்துதல், இறைவனின் உருவத்தை அமைத்து வழிபடுதல், அன்றாட வழிபாட்டுச் சடங்குகளைச் செய்தல் என்பனவாகும். இக்கொள்கையை ஆண்டாள் தம் திருப் பாவையில் வலியுறுத்தவதாக அமைகிறது. எப்பிறவியிலும் இறைவனையே சரணடைய வேண்டும் என்ற கருத்தை,

**'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு**
**உற்றோமே யாவோம் உணர்க நாட ஆட்செய்வோம்**
**மற்றை நங்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்' (திருப்பாவை. 29; 3-6)**

என்ற பாடலின் வழி அறிய முடிகிறது.

இறைவனையே எப்பொழுதும் நினைத்து வாழும் மெய் நிலையை,

**'உனறன்னோடுறவேல் நமக்கிங்கொழிக்க வொழியாது' (திருப்பாவை. 28 : 5)**

என்ற பாடலடியாலும், மனம், மெய், மொழி என்ற மூன்றினாலும் இறைவனை வழிபடும் கிரியை நெறியும், இறைவனை வழிபட்டால் தம் பிழைகள் யாவும் அகலும் என இறைவனை முழுமையாக அறிந்த அவர்களது ஞானநெறியும் ஒருங்கே அமைந்திருப்பதை,

**'தூயோமாய் வந்து நாம் தூமலர்கள் தூய்ததெழுந்து**
**வாயினாற் பாடி மனத்தினால் சிந்திக்க**
**போய பிழையும் புகுதரு வானினறனவும்**
**தீயனில் தூசாகும் செப்பலோரெம்பாவாய்' (திருப்பாவை. 30)**

என்ற பாடலடிகளாலும் அறிய முடிகிறது. திருப்பாவையில் உள்ள முப்பது பாடல்களையும் தவறாமல் ஓதுபவர்கள் திருமாலின் அருள்பெற்று மகிழ்ச்சியாக வாழ்வார்கள் என்று திருப்பாவையினால் ஏற்படும் பயன்களை ஆண்டாள் குறிப்பிடுகிறார், இறைவன் நமக்குப் 'பறை' தருவான் என்கின்றார். 'பறை' என்ற சொல் இசைக்கருவி, பரிசுப்பொருள் என்ற பொருள்களை மட்டும் தருவதாகச் சுட்டப்பெறவில்லை. ஆண்டாள் பாடல்களில் குறிப்பாகப் 'பறை' என்ற சொல் வீடுபேற்றைக் குறிப்பதாகவே அமைகிறது. இலக்கியத்தின் நோக்கம் அறம், பொருள், இன்பம் உணர்த்துவதாகும். அதனோடு வீடுபேற்றையும் தரும் என்ற கருத்தைத் தன் சங்கத் தமிழ்மாலையின் வாயிலாகக் குறிப்பாக உணர்த்துவதன் மூலம் அனைவராலும் போற்றிப் பின்பற்றப்படும் புனித நூலாகத் திருப்பாவை திகழ்கிறது.

இவ்வுலகில் உடம்போடு பிறந்த உயிர்கள் அனைத்தும் பரமனாகிய எம்பெருமானையே அடைய வேண்டும். இந்த எண்ணத்தில் உறுதிபாடு மிகவும் கொண்டவள் ஆண்டாள். இந்நெறியைத்தான் பாவை நோன்பு ஏற்ற தம் தோழிகளுக்கும் உலகத்தாருக்கும் எம்பெருமானை அடைவதற்குரிய

வழியைக் காட்டிக் கொடுக்கின்றாள் ஆண்டாள். பிறவிதோறும் நின் புகழ் பாடி உன்னை மறவாதிருக்க வரம் வேண்டும் என்றே இறைவனை வேண்டுகின்றாள்.

**முடிவுரை**:

மனிதராய் பிறந்து இவ்வாறு உண்மையான பக்தி மெய் ஞானத்தால் இறைவனை வணங்கி, தான் நினைத்த அன்பை அவனுக்கே உரித்தாக்கி மகிழ்ந்தவள் ஆண்டாள். ஆண்டாளின் மெய்ப்பொருளை உலகம் அறிய நாம் கொண்டாடுவோம்.

**தொகுப்புரை**

ஆண்டாள் இயற்றியது மிக குறைந்த பாக்களே ஆயினும் அவற்றின் சாரமும் சங்கத்தமிழ் அழகும் மெய்யியல் உட்பொருளை உடையது. அன்றைய சமுதாயத்திற்கு மட்டுமல்லாது என்றென்றும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய உயர்ந்த எளிய பக்தியை வெளிப்படுத்தியுள்ளார். இறை மீது சிந்தனை ஒருமைப்படின் மனிதன் அலைபாயும் மனத்தை விடுத்து அன்பு கருணை இரக்கம் சகிப்புத்தன்மை என்ற உயர்ந்த அறநெறியை கூட்டிக்கொண்டு செல்லும். உடல்தூய்மை மட்டுமல்லாது மனத் தூய்மையும் வேண்டும் என்பதையே உலகிற்கு ஆண்டாளின் பாடல்கள் காட்டியது எனில் அது மிகையல்ல. இதன்படி நமக்கு எத்தகையோரும் எளிமையான இறைவழிபாட்டால் மெய் உணர்வு பெற்று வாழ்வாங்கு வாழலாம் என்பதை ஆண்டாள் பனுவல்கள் முன்னிறுத்துகின்றன.

**துணை நின்ற நூல்கள்:**

1. திருப்பாவை விளக்கம், டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், 1972, பாரி நிலையம், சென்னை

2. திருப்பாவை, நாச்சியார் திருமொழி உரை, இராமஸ்வாமி அய்யங்கார், 1986, ஆழ்வார்கள் அமுத நிலையம்

3. ஆண்டாள், டாக்டர் சி. பாலசுப்பிரமணியம், 1994, நறுமலர் பதிப்பகம், சென்னை

4. பெரியாழ்வார் , ம. பெ சீனிவாசன் · 1999, சாகித்திய அகாதெமி

5. 12 ஆழ்வார்கள்: திவ்ய சரிதம், வேணு சீனிவாசன் , 2013, கிழக்குப் பதிப்பகம், சென்னை